உ

கணபதி துணை.

திருவொற்றியூர்

வழிநடைப்பதம்.

இஃது

சிவகுருதாசனென்னுங்காரணப்பெயரெய்திய

தொழுவூர்

வேங்கடாசல ஆசாரியார்

அவர்களால்

இயற்றப்பட்டு

காணியம்பாக்கம்

வேங்கடேசமுதலியார் குமாரராகிய

பொன்னம்பலமுதலியார்

அவர்களால்

சென்னை.

வண்ணாரப்பேட்டையில்,

பு - சு. கிருஷ்ணசாமிபிள்ளை

அவர்களது லக்ஷுமீவிலாஸசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுக வருஷம் மாசி மீ

உ

கணபதி துணை

திருவொற்றியூர்

வழிநடைப்பதம்.

115733

பின்முடுகுவெண்பா.

ஆதிபுரி தியாகேசராடும் பவனிதனைக் ... ...*
காதலியே கண்குளிரக்கண்டுநாம் - போது ... ... *
வுளமகிழ்ந்து தரிசனஞ்செய் துறு கலங்களாலம்பொருந்த*
வளை குலுங்க மணிகள் கொஞ்சவா. ... ... *
சீரார் திருவொற்றித் தியாகரிருந்தாரென்ற ... ...*
பாராபுகழும்பவனிதனை - [illegible] ... ... *
சந்தஞ்சிந்துங்கிளியே தண்டந்தஞ்சும்மிடையே ...*
பந்தந்தங்குங்குயிலேபார் ... ... *

பதம்

இராகம் புன்னாகவராளி தாளம் - திரிபுடை.

பல்லவி.

தியாகர்பவனியைத்தானே சென்று
சேவிப்பமவா மடமானே

அநுபல்லவி.

வாகைபரவுந்திருவொற்றியூரினில்
…ழ்வடிவல்லீசமனைவினனுஞ்சந்திர
சேகரனெங்கள்கிர் பாகரனன்பகள்
திரமுற்றுளமேனாடும் பரதத்துடனேயாடும் (தியாக)

சரணங்கள்

தேசம்புகழ் சென்னையாப்புரி ஸ்பத்திரிதெரு முதலி
யைக்கடந்துமேவும்- செம்பட்டப் பிள்ளையார் கோவிலைவி
ட்டுச் செழிப்புறமேவதாவி நடந்து - மாசிலாத கந்தசாமி
கோயிற் றிருமதிற் றிருக்குளமடர்ந்து - செல்வ - வண்
மையிருங்குச்சிராத்திகள் வாழ்கின்ற மாடவீதிதன்னை
த்தொடர்ந்து - ஏகனேகாம்பரன்சேவடிசிந்தித்து - வத்
தஞ்சின்னக்கடை யம்மையைவந்தித்துப்-பேசுமடிபோ
ட்டபிள்ளையாரைப்போற்றிப்

பிரியத்துடனேவேண்டி
வரிசைப்பெறவேதாண்டி. தியாகர்பவ

அடுத்திடுஞ் சதுர்வேதசிந்தாந்த சபையைப்புகழ்ந்து
கொண்டாடிக் - கடந்- தப்புறஞ்சென்று செங்காக்கடை
வாழருஞ்சலவீசனைப்பாடிச்-கடிக்கமலவினாயகர்சந்நிதி
கண்டு தொழுதன்பாய்க்கூட - மலர்க் - கன்னனெனனு
மாரம - சாமிதன்கோவிலுக் கடந்தஞ்சென் றுள்ளமகா

படிக்கரு மிலக்கியவிலக்கணப் பரவையின்கலை தேர்
ந்தநற்குண - வடிப்பமேவும் விசாகப்பெருமாளையர்

வாசத்திருமனை தாவி
நேசித்திருவருமேவி   தியாகர்பவ

எங்கும்புகழ் சுப்ரமண்ணியர்கோவில்விட் டேழுகி
ணற்றையும்நீங்கி - ஒளி - இலகுந்தங்கசாலைக் கெவினி
க்கப்பாலேகி மனமகிழ்தாங்கி - தங்குமாபீசமுத்தையா
முதலிதன் சத்திரத்திற்சலம்வாங்கித் - தாகஞ்-சாப்பிட்
டடுத்தரெயில்ரோட்டைத் தாண்டி - ஜமேதார்காட்டை
விட்டேறங்கி - மங்கள்மேவியவண்ணாரப்பேட்டை - மா
ர்க்கமிதுதான் கடைத்தெருப்பாட்டை - இங்கிதப்பூப்பந்
தல்தண்ணீர்பந்தலூட

விலகும்புதுமைகள்கண்டு
குலவுந்தகையதுகொண்டு   தியாகர்பவ

அன்னையுள்ளாரம்மன்கோவில் மணலி சின்னையாமு
தலிதன்தோட்டம் - தஞ்சை- யம்பதிவாழ் ராமநாயகன்
சத்திரத்தந்தணர் சாப்பிடுங்கோஷ்டம் - என்னசொல்
வேனப்பாசாமிப்பிள்ளை பங்களாவுக்கப்பாலுள்ள கூ
ட்டம் - காவ- லிருக்குந்தலையாரிகாட்டிதனைக்கடந்தேகி
லுண்டோமனைவாட்ட-பின்னுங்குடிப்பெண்கள் கூடி

த் தங்கள்குறை - பேசிக்கொள்ளும் நல்லதண்ணீர்க்கே
ணித்துறை - பண்ணருந்தண்டையார் பேடகத்தீசுரன்.

பதத்தைப்பரிவொடுசார்ந்து
துதித்துக் கனிவது கூர்ந்து தியாகர்பவ

சாருமனவார் வரதராஜேந்திரன் சத்திரம்பார்நல்லதி
ட்டம் - ஒளி - தாவுமருணசலசெட்டி செய்யன்னதான
ச்சாலைவெகுசட்டம் - தெரும்வேதப்பள்ளிக்கூடமும் ப
ட்டாபிசெட்டித் தோட்டங்கடந்திஷ்டம் - போலேதே
வனருணசலேசுரன் பேட்டையைச்சேர்ந்தோ மினியெ
ன்னகஷ்டம் - நேருந்திருமதில் சந்நிதிகோபுரம்-நீளுந்தி
ருக்காமிநாயகன்சத்திரம் - சீருலவும் அப்பர்சாமிசமாதி
யைச்

சிந்தித்தெதிரே நின்று
வந்தித்துடனேசென்று தியாகர்பவ

கூறும்புதுவண்ணார்பேட்டை மெஞ்ஞானகுருதேவ
ன்மடஞ்சேர்ந்து- களி- கொண்டப்புறம் வெள்ளைவேட்
டிப்பரதேசி கோவில்சமாதியைத்தேர்ந்து- மாறுகொள்
பாதிரி யிஸ்க்கூல்விட்டுத் தாங்கல்மணலிற் காமியங்கூர்
ந்து - கொண்ட - மையல் தீர்த்துக்கொண்டு தையலே
நாம் செல்லவாய்த்த விடமிதைச்சார்ந்து - கோறியிக்
காலடிப் பேட்டைவாதனாக்- கும்பிட்டோராயிரந் தீப
மிட்டுத்திணா-வீறுமுனியப்பசெட்டிதன் சத்திர

ஸ்ரீ திருவொற்றியூர்வழிநடைப்பதம்.

சிந்தையையன்பாய் நோக்கிச்
சிந்தைநசிவின்பந் தேக்கி தியாகர்பவ

அஷ்டர்திருடராற் குற்றமொன்றில்லாமற் சூழ்ந்தி
டுஞ் சேவகரோடும் வாழும் - தூயன்இனிஸ்ப்பெக்டர்
காட்டிதுகாண்பசந்தோகையே நல்வளம்நீடும் - திட்ட
மிகுஞ் சங்குபிள்ளைசத்திரந்திரு- வண்ணமலைமடத்தோ
டுங் - குண - சீலனுங்கன்னையசெட்டி தெளிசிங்கசெட்
டிச்சத்திரத்துடன்கூடும் கட்டழகான இளாஸ்க்காரச
த்திரங் - காரோவாறுமுகன் சத்திரவிச்சித்திரம்- சட்ட
முடன்கண்டு பவனிமண்டபந்

சந்நிதியிதுதான் நேரடி.
நன்னயமொழியேபாரடி தியாகர்பவ

வானுலவுங்கோபுரச்சேவை செய்திதோவந்தோம்வா
விக்கணாபாராய் திரு வாசல்நுழைந்து துஜஸ்தம்பச்சே
வையும் வண்மையுடன்செய்து சீராய்- தேன்மொழியே
மூலஸ்தானமும் உற்சவத் - தியாகனையுங்கண்டு நோய்
நின்று - தெரிசித்து வட்டப்பாறையம்மன் பதச்சேவை
யுஞ்செய்குவம்வாராய் - ஸ்வானமேறும் வயிரவனைச்சி
த்து- மன்னுமகிழடி தன்னையுஞ் சந்தித்துக்-காணமார்கோ
தை திகழ்வடிவன்னைதன்

கமலப்பதமே நாடி
விமலத்துதிபே பாடி தியாகர்பவ

எங்கெங்கும்பச்சோலைப் பந்தலிட்டு நீர்மோரிஇன்புற்
றளிக்கும் சிங்காரம் - இதை - எந்தனாற்சொல்லத் தரம
ல்லவாகிலுமெடுத்துச் சொல்வனிந்நேரம் - சங்கையில்
லாமல் வெள்ளரிக்காய் பட்டிசருக்கரையாதி விஸ்தாரம்
இவை - தானளிக்கப்பெறுவோர்கள் கொடுவென்றுசா
ற்றிடும் பேராரவாரம்-சங்குதவண்டை மல்லரியினோசை
யும் சல்லரிமத்தளத் தாளத்தினோசையும் பொங்குமுட
கண்களிப்பினோடு

115733

பொருந்தும்மதிசயம் [illegible]
இருந்துள்ளமகிழ்கூர [illegible] தியாகர்பவ

மருமலர்க்கொன்றைதும்பை [illegible] டுங்கங்கைமதியணி
சடையாட - அர - வப்பணியுந் [illegible] செங்கையி
ல்மானுமழுவுநின்றாட - இருசாணைச் [illegible] சிலம்புக
ளயாவுங்கலகலென்றாட - ஒளி - இலங்குஞ்சாமரம் ஆ
லவட்டங்குடை யெழுந்தெழுந்தசைந்தாட - அரிவைய
ர்பலர் வரிசையாயாட - அன்பரெல்லாருநின்றுனந்தக்கூ
த்தாட - திருவொடுங்காளமிர்தங்க வாத்திய

சந்தம்பலவும் நீடும்
டிங்டிங்டிமியென்றுடுங் தி[illegible]கர்பவனி

திருவொற்றியூர்வழிநடைப்பதம்.

கட்டளைக்கலித்துறை.

சுந்தரர்வேண்டுகைக்காகங்கிழிடைத்தேதாயகன்ற
சந்திரசேகரர்வந்ததுதேர்ந்தநற்சங்கிலியார்
இந்தமகிழிடையேசூளியம்புகெனவியம்பச்
சந்தமுறுந்தம்பிரான்றோழர்வந்தனர்தாழ்குழலே

115732

வந்துநின்றேயும்மகிழமரத்தினைவந்தனஞ்செய்
தந்தமுறுமயிலேயுனையான்பிரிந்தாற்றுகிலேன்
இந்தமொழியுண்மையென்றேயுநம்பியவ்வேலத்திழையைப்
பந்தமிகுமணஞ்செய்தார்பாரறிவைபங்கிளியே

நாடுங்கமலத்தயன்றிருமாலொடுநான்மறையுந்
தேடும்பதத்தன்வடிவன்னைபாகன்வெண்டிங்கள்கங்கை
சூடுஞ்சடையுடைத்தியாகேசரன்பொடுதோத்திரியென்
றோடும்பவனியைக்கண்டோர்துயர்விட்டகன்றிடுமே

தேவாரம்.

பத்திலாமையாலுன்பதமடைந்திட்டவேழைக்
குத்தமரடையுமேலாமுண்மைநன்னிலைதந்தாள்வாய்
அத்தியையுரித்தகோவேயத்தியைக்கடைந்தமாயோன்
சித்தமும்பணியுமொற்றிவிமலனேயமலவாழ்வே.

திருவொற்றியூர் வழிநடைப்பதம்

முற்றிற்று.